Literacy for a Billion

Movie: Kaadhal Kottai
Year: 1996

Song: Nalam Nalamariya
Lyricist: Agathiyan

நலம் நலமறிய ஆவல்
உன் நலம் நலமறிய ஆவல்
நீ இங்கு சுகமே
நான் அங்கு சுகமா
நீ இங்கு சுகமே
நான் அங்கு சுகமா
நலம் நலமறிய ஆவல்
உன் நலம் நலமறிய ஆவல்
தீண்டவரும் காற்றினையே
நீ அனுப்பு இங்கு வேர்க்கிறதே
வேண்டும் ஒரு சூரியனே
நீ அனுப்பு குளிர் கேட்கிறதே
கடிதத்தில் முத்தங்கள்
அனுப்பிடலாமே
என் இதழ் உனையன்றி
பிறர் தொடலாமா
இரவினில் கனவுகள்
தினம் தொல்லையே
உறக்கமே எனக்கில்லை
கனவில்லையே
நலம் நலமறிய ஆவல்

உன் நலம் நலமறிய ஆவல்
கோவிலே நான் தொழுதேன்
கோலமயில் உனை சேர்ந்திடவே
கோடிமுறை நான் தொழுதேன்
காலமெல்லாம் நீ வாழ்ந்திடவே
உன்முகம் நான் பார்க்க
கடிதமே தானா
வார்த்தையில் தெரியாத
வடிவமும் நானா
நிழற்படம் அனுப்பிடு
என் உயிரே
நிஜமின்றி வேறில்லை
என்னிடமே
நலம் நலமறிய ஆவல்
உன் நலம் நலமறிய ஆவல்
நீ இங்கு சுகமே
நான் அங்கு சுகமா
நீ இங்கு சுகமே
நான் அங்கு சுகமா
நலம் நலமறிய ஆவல்
உன் நலம் நலமறிய ஆவல்

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.